*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆந் ஆண்டின் 4 ஆம் இலக்க,இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்*

---

*(1999, மாச்சு மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்கு குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 5.25 தபாற் செலவு: ரூபா 3.50

*1999ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள்*
*சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்*

*1999 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ. – ஓ. 1/98*

***தேசிய வீடமைப்பு ஆணையாளரால் அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கையுதிர்க் கப்படுவதற்கென உத்தேசிக்கப்பட்ட குறித்த சில கூட்டாட்சி ஆதனங்களின் வரைபடங்களைப் பதிவுசெய்வதற்கு வசதியளிப்பதற்கும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சொத்தாண்மைச் சட்டத்தைத் திருத்துவதற்குமானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (சிறப்பேற்பாடுகள்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

பாகம் 1

**2.** (1) தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமானவையும் 1994,திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையும் விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு என்ற வகையில் எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அவற்றின் ஆட்சியுடைமை கையளிக்கப்பட்டுள்ளவையுமான எல்லாக் கூட்டாட்சி ஆதனங்களினதும் வரைபடங்களை, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு:– குறித்த சில கூட்டாட்சி ஆதனத்தைப் பதிவுசெய்தல்

(அ) அத்தகைய ஒவ்வொரு ஆதனத்தினதும் வரைபடம் அதன் துணை விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியதாக உள்ளன என்ற பயன்பாட்டிற்கு உள்ளூரதிகார சபையிடமிருந்து சான்றிதழொன்றும் அத்துடன்

(ஆ) கட்டிடம் ஒவ்வொன்றும் எந்தக் கூறுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளதோ அந்தக் கூறு ஒவ்வொன்றுக்கும் தனித் தனி வரி மதிப்பீட்டிலக்கமொன்று அல்லது சின்னமும் இல்லாதிருப்பது எவ்வாறிருப்பினும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யுமாறு பதிவாளர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவானது எல்லா நோக்கங்களுக்காகவும் சட்டமுறையாக செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப் படவுள்ளதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(2) குறிப்பிட்டவொரு கூட்டாட்சி ஆதனம் விடயத்திற்கேற்ப தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமானது, அத்துடன் அது 1994 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது அத்துடன் அத்தகைய ஆதனத்தின் ஆட்சியுடைமையானது விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு என்றவகையில் எவரேனும் ஆளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது என்ற பயன்பாட்டிற்கு தேசிய வீடமைப்பு ஆணையாளரின் அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி ஆணையாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று அதன்கண் அடங்கியுள்ள நிகழ்வுகளுக்கு முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 'பதிவாளர்' என்னும் பதம் (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரும் கூட்டாட்சி ஆதனம் அமைந்துள்ள பதிவு மாவட்டத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ளவருமான காணிப் பதிவாளர் என்று பொருள்படும்.

*இச்சட்டத்தின் இப் பாகத்தினுடைய கால எல்லை.*

**3.** இச்சட்டத்தின் இப்பாகத்தினது கால எல்லை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

பாகம் 11

*1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும்) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கூட்டாட்சி ஆதனம் (இதனகத்துப் பின்னர் "கூட்டாட்சி வரைபடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டாட்சி ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** 1982 ஆம் ஆணடின் 45 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு "கூட்டாட்சி வரைபடம்" என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தில் பதிவுசெய்யப்பட்ட "காணியின் வரைபடம் ஒன்று எனப் பொருள்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டாட்சி ஆதனமொன்றின் வரைபடம் ஒன்று எனப் பொருள்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை யைத் திருத்துதல்*

***6***. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்ட வணை, அவ்வட்டவணையின் 2ஆம் துணைச்சட்டத்தில் அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

“ (ஈஈ) பொது அம்சங்களுக்கு ஏதேனும் முறையில் சேதம் ஏற்படுத்துதல் ஆகாது; அத்துடன் மற்றெல்லாக் கூறுகளினதும் சொந்தக்காரர்களின் எழுத்திலான சம்மதமின்றி அத்தகைய பொது அம்சங்களுக்கு எவையேனும் கட்டுமான மாற்றங்கள் செய்யப்படுதல் ஆகாது;

ஆயினும், அத்தகைய மாற்றங்கள் கூறு ஒன்றின் இருப்பாட்சியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்படுமிடத்து, அவர், முதலில் அத்தகைய கூறின் சொந்தக்காரரது அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*